# மக்கள் பொறுமையிழந்து வருகின்றனர் என்கிறார் தமிழ்ச்செல்வன் பொதுக்கட்டமைப்பு குறித்து இனியும் பேசுவது அர்த்தமற்றது

பொதுக்கட்டமைப்பு என்ற விடயம் பூதாகரமாக்கப்பட்டு எங்கள் மக்கள் மத்தியில் ஓர் மாயையை ஏற்படுத்தும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுக்கட்டமைப்பு குறித்து இனியும் பேசுவது அர்த்தமற்றது. கடந்த 3 ஆண்டுகளில் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் நாடகமாடி சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே அரசு முயல்கின்றது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச் செல்வன் கேசரி நாளிதழுக்கு வழங்கிய விசேட பேட்டியில் கூறியுள்ளார் ""எங்கள் மக்கள் மதவெறி கொண்டவர்களல்ல. நாங்கள் பௌத்த மதத்தை மதிப்பவர்கள். ஆனால் திருகோணமலையில் திடீரென புத்தர் சிலை அமைக்கப்பட்டது இன மத நல்லெண்ணத்தைக் குலைத்து சமுக நிலையைச் சீர்கெடுக்கும் நோக்குடனாகும். அத்துடன் சிங்கள பௌத்த அடையாளங்களை நிறுவி ஏனைய இன மக்களின் மனதை புண்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது. இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சொன்னார்.

தொடர்ந்தும் இலங்கை அரசும் படையினரும் இவ்வாறு செயற்படுவார்களேயானால் அதனை எமது மக்கள் ஏற்றுக்கொள்ளவோ பொறுமையுடனோ இருப்பார்கள் என்று கருதமுடியாது. ஏனெனில் பொறுமையின் விளிம்பிற்கே நாம் இன்று வந்துவிட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு சவால் விடும் வகையிலும் தமிழ் மக்கள் மீது அநாவசியமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையிலும் புதிய புதிய நெருக்கடிகளும் பொருளாதாரத் தடைகளும் கொண்டுவரப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து அனுமதிக்கவோ பார்த்துக்கொண்டிருக்கவோ முடியாது என்றும் தமிழ்ச்செல்வன் விபரித்தார்.

எமது இராணுவ கட்டுமானங்கள் உச்ச நிலையில் உள்ளன. திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்களை சீண்டும் செயலாகவே அமைந்துள்ளது. சமாதான சூழலைப் பயன்படுத்தி இவ்வாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த தீய சக்திகள் முனைவதை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எமது மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டமைக்கு முன்னர் இடம்பெற்ற இவ்வாறான நடவடிக்கைகளே காரணமாகும். அரசின் இத்தகைய மோசமான நடவடிக்கை தொடர்பாக நாம் எமது கண்டனத்தை தெரிவித்துள்ளளோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இனக்கலவரத்தை தூண்ட முனைவது மிகவும் அபாயகரமான சூழலையே தோற்றுவிக்கும். அத்துடன் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறான அடக்கு முறைகளைப் பிரயோகிக்குமானால் இது நிச்சயமாக ஒரு நெருக்கடியான சூழலையே ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் கேசரி நாளிதளுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது பேட்டியின் விபரம் வருமாறு

**கேள்வி: பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் தற்போதைய நிலை என்ன என்று கூற முடியுமா?**

பதில்: உண்மையில் பொதுக் கட்டமைப்பு என்பது ஒரு பெரிய விடயமல்ல. ஊடகங்களே அவற்றைப் பெரிது படுத்துகின்றன. உண்மையில் பொதுக் கட்டமைப்பு என்பது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வட கிழக்குப் பகுதிகளை மீளமப்பு செய்வதற்கான ஒரு பொறி முறையேயன்றி எமது ஒட்டு மொத்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வேலைத் திட்டமல்ல. பொதுக் கட்டமைப்பு என்ற விடயம் பூதாகரமாக்கப்பட்டு எங்கள் மக்கள் மத்தியில் ஓர் மாயையை ஏற்படுத்துவதாகவே இருந்தது.

**கேள்வி: பொதுக் கட்டமைப்பை வழங்குவதிலேயே தயக்கம் காட்டப் படும் நிலையில் சமாதான முயற்சிகள் எவ்வாறு ஓர் நிலையான தீர்வைக் கொண்டு வரும் என்று கூறுவீர்களா?**

பதில்: அது தான் இன்று கேள்விக் குறியாக உள்ளது. சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்குத் தீர்வைக் கொண்டு வருவார்கள். என்பதில் தமிழ் மக்களுக்கு எந்த விதமான நம்பிக்கையும் இல்லை. கடந்த கால வரலாறும் இதனையே கூறுகின்றது. இருப்பினும் தற்போது எமது மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தைக் கட்டியெழுப்பி இராணுவ ரீதியாகப் பலம் வாய்ந்த நிலையிலும் சரியான தலைமைத்துவத்தின் கீழும் எமது விடுதலைப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து தங்களுக்கு சரியானதோர் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர். ஆனால் இன்று சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக் கொண்டு எமது மக்களை பழைய நிலைக்குத் தள்ளும் ஓர் சூழ்நிலைக்கு தான் இலங்கை அரசாங்கமும் ஆயுதப் படையும் சென்று கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் இதனை இனியும் நம்பத்தயாராக இல்லை. தங்கள் அரசியல் இராணுவ பலத்தைக் கட்டியெழுப்பி தங்கள் உரிமைகளை வென்றெடுக்க கூடிய சூழலில் தமிழ் மக்கள் இன்று உள்ளனர். எனவே கடந்த காலம் போன்று பொறுமை காத்துக் கொண்டு அல்லது இவற்றை அனுமதித்துக் கொண்டு இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. நிச்சயமாக அதற்கான ஓர் கட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டு தான் தமிழ் மக்கள் உள்ளனர்.

**கேள்வி: கடந்த காலங்களை விட தற்போதைய போர் நிறுத்த சூழ்நிலையில் புலிகளின் போராளிகள் தளபதிகள் பலர் பலியாகியுள்ளனர். இந் நிலையின் போர் நிறுத்தத்தைப் பொறுப்புணர்வோடு கடைப்பிடித்து வருகின்றீர்கள். அது எவ்வளவு தூரம் எதிர்காலத்தில் சாத்தியமானது என்று கருதுகிறீர்கள்.**

பதில்: சமாதான காலத்தில் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றோம். இந்த சூழ்நிலையில் எமது அமைப்பை பலவீனப்படுத்த என்னென்ன செயற்பாடுகளைச் செய்ய முடியுமோ அத்தனை செயற்பாடுகளையும் இலங்கைப் படைகள் நகர்த்தி வருகின்றனர். நாங்கள் முடிந்தளவு பொறுமையுடன் இருந்து வருகிறோம். சர்வதேச சமூகத்துக்கு இங்குள்ள நிலைப்பாடுகள் சரியான முறையில் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே எமது பொறுமை காப்பு உச்ச நிலையில் உள்ளது. ஆனால் தொடர்ந்தும் இலங்கை அரசும் படையும் இவ்வாறு செயற்படுமானால் அதனை எமது மக்கள் ஏற்றுக் கொள்ளவோ பொறுமையுடனோ இருப்பார்கள் என்று கருத முடியாது. ஏனெனில் பொறுமையின் விளிம்புக்கே நாம் இன்று வந்து விட்டோம். இதனை எமது தேசிய தலைவரே மாவீரர் தின உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**கேள்வி: சர்வதேச சமூகத்தில் நீங்கள் அதீத நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிகிறது. அது குறித்து விளக்க முடியுமா?**

பதில்: சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இன்று அதிகளவுள்ளதால் அவர்களுக்கு யதார்த்தத்தைப் புரிய வைக்கும் கடப்பாடு எமக்கு உண்டு. அதனையே நாம் செம்மையாக நடைமுறைப்படுத்தி வந்துள்ளோம். இப்பொழுது முக்கியமான கட்டத்திற்கு வந்துள்ளோம். நிச்சயமாக சர்வதேச சமூகம் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படும் அதேவேளை பூரண அங்கீகாரத்திலும் அது வழி சமைப்பதாக இருக்கும்.

**கேள்வி: பொதுக் கட்டமைப்பு தொடர்பில் அரசுக்குள் முரண்பாடு வலுவடைந்துள்ள நிலையில் ஜே. வி. பி. ஜப்பானிலும் அது குறித்து கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. இவ்வாறான சூழலில் பொதுக் கட்டமைப்பை அமைப்பது குறித்து காலவரையறை எதையும் அரசுக்கும் வழங்கும் நோக்கம் உள்ளதா?**

பதில்: பொதுக் கட்டமைப்பை மாத்திரம் ஒட்டு மொத்தமாக நாம் பார்ப்பது இல்லை. யுத்த நிறுத்த உடன் படிக்கை தொடர்ச்சியாக மீறப்பட்டு வருவதுடன் நெருக்கடியான சூழ்நிலையும் தொடர்ந்து வருகின்றது. ஒரு வகையில் யுத்த நிறுத்தத்தை மீறுவதாகவே இலங்கை படையினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. வட கிழக்கில் எமது தாயகப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களுடன் சேர்ந்து கொலைகள் வன்முறைகளைத் தூண்டி விடுவதிலும் இராணுவ நெருக்கு வாரங்களை அதிகரிப்பதிலும் பொருளாதார ரீதியான கட்டுப்பாடுகளை விதிப்பதிலுமே கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் ஒட்டு மொத்தமாக நிலைமைகளைச் சீர்குலைப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. அதோடு பொதுக் கட்டமைப்பையும் நெருக்கடிக்குள் உருவாக்கி ஜே.வி. பி. ஒருபுறம் எதிர்ப்பைக் காட்டுவதும் ஜனாதிபதி ஒரு புறம் ஆதரவு தெரிவிப்பதுமாக ஒரு நாடகம் ஆடி சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே முனைகின்றனர். இவர்களுக்கு ஒருபோதும்

நல்ல நோக்கம் இல்லை. எமது மக்களுக்கான மனிதாபிமான .உதவிகளைச் செய்ய வேண்டும். என்ற உணர்வோடு இவர்கள் செயற்படுவதில்லை. கடந்த 3 வருடங்களாக எந்த விதமான தீர்வு மின்றி காலத்தை இழுத்தடித்து விட்டு பொதுக் கட்டமைப்பு குறித்துப் பேசுவது அர்த்தமற்றது.

முக்கியமாக ஜே. வி. பி. எதிர்ப்பதாகக் கூறுவதெல்லாம் வெறும் அரசியல் தந்திரோபாயங்கள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் நடைபெறுவதாகவே நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் ஜே. வி.பி. யை ஜனாதிபதி தனது கூட்டுக் கட்சியாக அமைத்தபோதே தமிழ் மக்களுக்கு முற்று முழுதாக எதிரானக் கருத்துக்களையே கொண்டிருந்தனர். எனினும் ஜனாதிபதி அவர்களையே தனது அரசியல் கூட்டுக்குள் கொண்டிருக்கிறார். ஆகவே இவையெல்லாம் தெரிந்து கெண்டு ஜே. வி.பி மறுக்கிறது எதிர்க்கிறது. எமக்கு சம்பந்தமில்லை என்றெல்லாம் ஜனாதிபதி உலகிற்குக்காட்ட முயல்வது ஓர் அரசியல் கபட நாடகமேயாகும். நாங்கள் இதனை ஒரு போதும் நம்பத் தயாராகவில்லை. தமிழ் மக்கள் கால அவகாசத்தை வழங்கியிருக்கிறார்கள். இதை சிங்கள தேசம் சிங்கள இனவாதிகள் புரிந்து கொள்ளாது மீண்டும் தமிழ் மக்களை தங்களுடைய பாதைக்கே தள்ளி விடுவார்களேயானால் அந்த பாதையை நோக்கி தமிழ் மக்கள் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. என்றே எண்ணுகிறேன்.

**கேள்வி: திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் இன்று பூதாகரமாகி வருகிறது. இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்று கூற முடியுமா?**

பதில்: எம்மைப் பொறுத்தமட்டில் இவ்விவகாரம் குறித்து நாம் சர்வதேச மட்டத்தில் எடுத்துக் கூறிவருகிறோம். அரசின் மோசமான இந்த நடவடிக்கை தொடர்பாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளோம். இது மக்களைச் சீண்டும் வகையில் முன்னெடுக்கப்படும் ஒரு செயல். எங்கள் மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கு முன்னர் இடம்பெற்ற இவ்வாறான சில நடவடிக்கைகளும் காரணமாகும். எங்கள் மக்களின் வாழ்விடங்களை அபகரித்து சிங்கள மயப்படுத்தி எமது மக்களின் இடங்களில் சமாதான சூழலைப் பயன்படுத்தி திட்டமிட்ட குடியேற்றத்துக்கு வழி வகுக்கப்படுகின்றது. இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த சூழ்நிலையில் மக்களின் உணர்வுகளைக் கிளப்பி மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தும் சூழலொன்று ஏற்பட்டுள்ளது. இது இனக்கலவரத்தை தூண்டுவதுடன் மிகவும் அபாயகரமான சூழலை தோற்றிவிப்பதாகும். இலங்கை அரசாங்கம் தொடர்ந்து இந்த வகையான தனது அடக்குமுறையைப் பிரயோகிக்குமானால் நிச்சயமாக ஓர் நெருக்கடியான சூழ்நிலையே தோன்றும்.

முக்கியமாக இலங்கை படையினரே இதற்குக் காரணமாகும். எங்கள் மக்கள் மதவெறி கொண்டவர்களல்ல. நாங்கள் புத்த மதத்தை மதிப்பவர்கள் தான். ஆனால் இந்த நடவடிக்கையானது இன மத நல்லெண்ணத்தைக் குலைத்து சுமுக நிலைமையை சீர்கெடுக்கும் நோக்குடன் சிங்கள பௌத்த அடையாளங்களை நிறுவி ஏனைய இன மக்களின் மனதைப் புண்படுத்தும் நோக்குடன் தான் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் இவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

**கேள்வி: முன்னர் ஒரு கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியலில் காட்டிய நாட்டத்தை விடவும் இராணுவ ரீதியான நடவடிக்கைகளிலேயே கூடிய ஆர்வமும் நாட்டமும் காட்டினர். ஆனால் இன்று கூடியளவு அரசியல் விவகாரங்களில் நாட்டம் காட்டி வருவதுடன் சர்வதேச ரீதியில் சாதகமான அபிப்பிராயங்களையும் பெறக்கூடியதாகவுள்ளது அது பற்றி கூற முடியுமா?**

பதில்: சர்வதேச சமூகம் எமது மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை முழு அளவில் அறிந்துள்ளதுடன் சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் எடுத்துக் கூறியதன் வாயிலாக எமது உண்மையான நிலையை அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். இவை அனைத்தும் சர்வதேச ரீதியில் எமது அமைப்பு சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமைக்கான முக்கிய காரணமாகும்.

**கேள்வி: கடந்த 3 வருட கால கட்டத்தில் புலிகளின் அரசியற்றுறை தனது செயற்பாடுகளை மிகவும் நன்றாக திட்டமிட்டு செயற்படுத்தியுள்ளதாகக் கருதப்படும் அதேவேளை இராணுவ ரீதியான செயற்பாடுகள் எந்தளவிலுள்ளன என்பதையும் மக்கள் அறிய விரும்புகின்றனர். அது மாத்திரமன்றி அண்மையில் புலிகள் மற்றுமொரு விமானத்தை கொள்வனவு செய்யவுள்ளதாகவும் கூறப்படுகின்றதே அது குறித்து பிரஸ்தாபிக்க முடியுமா?**

பதில்: (நீண்ட சிரிப்புக்குப் பின்னர்) நாம் மக்களுக்கு ஓர் தெளிவான செய்தியைக் கூற முடியும் எமது தலைவரைப் பொறுத்த மட்டில் எமது மக்களை எது காத்ததோ அதை எப்பொழுதுமே கவசமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருக்கிறார். எங்களுடைய இராணுவ கூட்டமைப்பு மிக மிக வலுவான நிலையிலேயே உள்ளது. நிச்சயமாக நாம் இலங்கைப் படையினரை வென்று வட பிரதேசங்களை மீட்டு எங்களது பிரதேசங்களை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய இராணுவ மேலாண்மையைப் பெற்றமை காரணமாகவே இலங்கை அரசாங்கம் இறங்கி வந்து யுத்த நிறுத்தத்துக்கு வந்தது. இராணுவ மேலான்மையைப் பொறுத்தவரை நாம் மிகவும் உச்ச நிலையிலேயே உள்ளோம். இப்பொழுதும் இளைஞர்கள் யுவதிகள் எமது அமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று முன் வருகின்றனர். அந்த வகையில் எமது சகல கட்டமைப்புக்களும் வலுவான நிலையிலேயே உள்ளன. கடற்படையாக இருக்கலாம். இராணுவப் படையாக இருக்கலாம். அனைத்துப் படை நிர்மாணங்களும் வலுவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. மேலும் இவற்றைக் கட்டியெழுப்ப எமது மக்கள் தங்கள் பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

**கேள்வி: நீங்கள் விமான மொன்றைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் இது தொடர்பாக பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளாரே அது குறித்து நீங்கள் கூற விரும்புவதென்ன?**

பதில்: இந்தியாவின் உணர்வுகளுக்கு எமது பதில்களை நாம் ஏற்கனவே அளித்துள்ளோம். எங்களால் எமது பிரதேசத்தில் கட்டியெழுப்பப்படும் இராணுவ தளங்கள் என்பன இந்தியாவுக்கோ இதர நாடுகளுக்கோ அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்தவையல்ல. தமிழ் மக்கள் காலம் காலமாக இனப்படுகொலைக்கு ஆளாகி மிகக் கொடூரங்களுக்கு ஆளானார்கள். இதன் காரணமாக தங்களது பிரதேசத்துக்கான இராணுவ பலத்தை தாங்களாகவே கட்டியெழுப்பியுள்ளனர். தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் உரிமையை அவர்கள் நிறுவியுள்ளனர். அந்த அடிப்படையிலேயே இது கட்டியெழுப்பப் பட்டிருக்கின்றதே தவிர எவரையும் அச்சுறுத்தும் வகையில் இது கட்டியெழுப்பப்படவில்லை. இது முழுக்க முழுக்க எமது தாயகம் மக்கள் தங்கள் சொந்த தற்பாதுகாப்புக்காகக் கட்டியெழுப்பப் படுகின்ற கட்டமைப்புகளே தவிர எவரும் அச்சம் கொள்ளவோ கவலையடையவோ தேவையில்லை. ஏற்கனவே அவர்களின் வெளிப்பாடுகளுக்கு நாம் எமது உணர்வலைகளைப் வெளிப்படுத்தியுள்ளோம்.

ஆனால் சிங்கள அரசும் இனவாதிகளும் முழுக்க முழுக்க தமிழ் மக்களின் போராட்டங்கள் குறித்து சர்வதேச உலகத்துக்கு தப்பபிப்பிராயங்களை உருவாக்க முனைகின்றனர். அவர்களின் கட்டுக் கதைகளே இவை. ஆனால் எமதுகட்டுமானங்கள் யாவும் அப்போதிருந்தே உள்ளன. புதிதாக நாம் எதனையும் செய்ய வேண்டிய அவசி யம் இல்லை.

**கேள்வி: உங்கள் இராணுவ பலம் அதிகரித்து வருவது குறித்து சர்வதேச உலகம் என்ன கருதுகின்றது?**

பதில்: சர்வதேச உலகிற்கு நாம் நன்கு விளக்கியுள்ளோம். இலங்கை அரசு தனது படைகளை மறுசீரமைப்பது குறித்தும் புதிய இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்து வருவது குறித்தும் நாம் எடுத்துக்கூறியுள்ளோம். இந் நிலையில் தமிழ் மக்கள் தங்கள் படையை பலவீனப்படுத்த முனைய மாட்டார்கள்.

**கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைப் பட்டியலில் வைத்திருக்கும் நாடுகள்கூட அண்மையில் பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளதே?**

பதில்: உலக அளவில் பாரிய மாற்றங்கள் இன்று உருவாகி வருகின்றன. சமாதான முயற்சியில் எமது தலைமைப் பீடம் கொண்டுள்ள அர்ப்பணிப்பும் இலங்கை அரசின் உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகளும் பரந்த அளவில் எமது நிலைப்பாட்டையும் நியாயமான போராட்டத்தையும் அங்கீகரித்து வருகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.